மசா.1 ஜெயந்தி என்பவரின் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி:

1. எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் காசோலை வங்கியில் அவரது கையெழுத்தில் வித்தியாசம் உள்ளது என்ற காரணத்தினால் திருப்பப்பட்டது என்றால் சரிதான். எதிரியின் மீது உமராபாத் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். புகார் கொடுத்த தேதி ஞாபகமில்லை. புகாரை யார் எழுதியது என்றால் நான் சொல்ல சொல்ல யார் எழுதி கொடுத்தார்கள் என்று தற்போது ஞாபகமில்லை. எதிரி என்னிடம் பணம் மோசடி செய்ததாக புகாரில் எழுதப்பட்டிருந்தது. மேற்படி புகார் மனுவில் எதிரி சீட்டு பணம் தரவேண்டும் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் இல்லை, கைமாற்றாக வாங்கிய பணத்தை கேட்டு புகார் அளித்தேன். சிட்டு பணம் எந்த தேதியில் இருந்து வரவேண்டும் என்றால் ஞாபகமில்லை. எதிரியிடம் எந்தெந்த தேதியில் எவ்வளவு பணம் கொடுத்தேன் என்று தற்போது ஞாபகமில்லை, மூன்று தவணையாக பணம் கொடுத்தேன். கடன் கொடுக்கும்போது அத்தாட்சியாக ஆவணம் எதுவும் எழுதி வாங்கவில்லை என்றால் சரிதான்.
2. நான் உமராபாத் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மீது போலீசார் நடவடிக்கை எடுத்து எதிரியை 28.9.2016 அன்று கைது செய்தார்கள் என்றால் சரிதான். கைது செய்த போது அன்றைய தினம் நான் காவல்நிலையம் சென்றிருந்தேன். போலீஸ் விசாரணையில் எதிரி எனக்கு ரூ.7,25,000/– தரவேண்டும் என்று கூறினேன். முதல் தகவல் அறிக்கையில் எதிரி ரூ.7,00,000/– தரவேண்டும் என்று கூறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் எப்போது புகார் அளித்தேன் என்று தற்போது ஞாபகமில்லை. 20.9.2016 ஆம் தேதி அன்று மல்லிகாபுரத்தில் நடந்த பஞ்சாயத்திற்கு சென்றேன். மல்லிகாபுரம் எனது ஊர். பஞ்சாயத்தில் எதிரி 2 மாதத்தில் பணம் தருவதாக சொல்லி சென்றுவிட்டார். அதன் பின்னிட்டு 28.9.2016 அன்று உமராபாத் காவல் நிலையத்தில் ஏன் புகார் அளித்தேன் என்றால் சரிதான். எதிரியை கைது செய்தபோது நான் பெற்ற காசோலையை குறித்து போலீசாரிடம் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். எதிரி 20.9.2016 ஆம் தேதி காசோலை நான் சொல்வது போல் வழங்கியிருந்தால் 28.9.2016 ஆம் தேதி அவர் மீது புகார் அளிக்க அவசியம் இல்லை என்றால் சரியல்ல.நான் சொல்வதுபோல் காசோலையை எதிரி வழங்கியிருந்தால் அவரது ஜாமீன் மனுவில் நான் ஆட்சேபணை தெரிவித்திருக்கமாட்டேன் என்றால் சரியல்ல.
3. காசோலையை யார் நிரப்பினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. என் முன்பாக எதிரி இந்த காசோலையை நிரப்பிவில்லை. நான் தாக்கல் செய்துள்ள காசோலையில் தேதியிலும், தொகையிலும் திருத்தம் உள்ளது என்றால் சரிதான். தொகையை எண்ணால் எழுதும் போது 7 என்ற எண் சற்று விலகி உள்ளது என்றால் சரிதான். 7 லட்சம் என்பது எழுத்தால் எனது பெயரை தொடர்ந்து எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி எனது பெயரும் 7 லட்சம் என்ற எழுத்தும் வேறு கையெழுத்திலும், இருபத்து ஐந்து ஆயிரம் ரூபாய் என்பது வேறு கையெழுத்திலும் உள்ளது என்றாலும், வேறுவேறு பேனா மையினால் எழுதப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். இருபத்து ஐந்தாயிரம் ரூபாய் என்ற காசோலையை திருத்தி ஏழு லட்சத்தி இருபத்து ஐந்தாயிரம் என்று மாற்றி

தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. காசோலையின் தேதியில் வருடம் 13 என்பது திருத்தப்பட்டு 16 ஆக மாற்றப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

4. மேற்படி காசோலையை கையெழுத்து நிபுணர்களிடம் அனுப்புவதற்கு எனக்கு ஆட்சேபனை இல்லை. எதிரி எனக்கு எந்த காசோலையும் வழக்கவில்லை என்றாலும் போலியாக காசோலையை தயாரித்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. பொய்யாக காசோலையை தாக்கல் செய்திருந்தால் சட்டபடி நடவடிக்கை எடுக்கப்படும் என்றால் சரியல்ல. நான் சொன்னபடி மல்லிகாபுரத்தில் எந்த பஞ்சாத்தும் நடைபெறவில்லை என்றாலும் எதிரி எந்த காசோலையையும் வழங்கவில்லை என்றாலும் சரியல்ல.

J JAYGANESH Digitally signed by J JAYGANESH